# குருதி உறைந்த மண்



9

**வன்னியில் சிறீலங்கா அரசு, உலக நாடுகளின் உதவியோடும் ஒத்துழைப்போடும் நடத்திய மிகக்கொடூரமான இனப் படுகொலையின் அழிவில் இருந்து தப்பித்தவர் எழுதும் வரலாற்றுப் பதிவு இது**

— இரா.சிவசக்தி

நாங்கள் படுத்து ஐந்து நிமிடம்கூட ஆகவில்லை. முல்லைத்தீவில் இருக்கும் இராணுவத்தினர் ஆனந்த புரம் பகுதியை நோக்கி செல்வீச்சை ஆரம்பித்தனர்.

“ஐயோ! இஞ்ச பாதுகாப்பு வலயம் எண்டு அறிவிச்சு ஒருநாள்கூட ஆகேல்ல?. அதுக்கிடையில இஞ்சயும் செல்லடிக்கிறான்.”

“அவன் பாதுகாப்பு வலயம் அறிவிச்சதே செல்லடிக்கிறதுக்கு தானே” என்றார் எம்முடனிருந்த ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர்.

2 நிமிடத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் தொடர்ச்சியாக எறிகணைகள் எழுப்பும் பேரொலி நெஞ்சைப் பிளக்கவைத்தது.

“பதுங்கு குழி ஏதும் இருக்கிறதா...?” என வீட்டுக்காரப் பெண்ணிடம் கேட்டேன்.

“இஞ்ச பதுங்கு குழிவெட்டினால் அதுக்குள்ள பாம்புவந்து புகுந்திடும். அதால வெட்டயில்லை, அதோடை இண்டைக்குத்தான் இப்பிடி இஞ்ச செல்லடிக்கிறான்” என்றார் அப்பெண்.

பதுங்குகுழி இல்லை என்பதை எண்ண எனக்கு தூங்கமுடியவில்லை. பக்கத்தில் படுத்திருந்த, றோகினி அக்காவைத்தட்டி, “எனக்கு பயமாக இருக்கிறது” என்று சொன்னேன்.

“இவ்வளவு பேரும் ஒன்றாக இருக்கிறம். பயப்படாம படுங்கோ” என்றுவிட்டு அவ தூங்கிப் போனா.

ஏறிகணை குத்தப்படும்போது வெளிப்படும் ஒளி வானத்தில் பளிச்சிட்டபடியே இருந்தது.

எங்களுடன் வந்த ஒரு குழந்தை விடியும்வரை சத்தி எடுத்துக்கொண்டிருந்தது. தொடர்ந்து காய்ச்சலும் காய்ந்துகொண்டிருந்தது. மருந்து எதுவுமில்லை.

குழந்தையுடன் சேர்ந்து தாயும் அழுதுகொண்டிருந்தார். எங்களைத் தொடர்ந்து நாங்கள் இருந்த வீட்டுக்கு 3 குடும்பங்கள் வந்துவிட்டன.

அது ஒரு பெரிய தென்னந்தோட்டக்காணி. இரண்டு கழிப்பறைகள் இருந்தன. ஒவ்வொரு குடும்பமும் தற்காலிக குடிசைபோட ஆரம்பித்தனர்.

பழைய மில் இருந்த கட்டிடம் ஒன்று எமக்கு கிடைத்தது. எனவே குடிசைபோடும் வேலை இல்லை. எனவே, எங்களை அழைத்துவந்த செல்வா பதுங்குகுழி அமைக்கும் வேலையில் ஈடுபட்டார். பதுங்குகுழி வெட்ட கூலிக்கு யாரையும் பிடிக்க முடியாது. அத்துடன் கூலி கொடுப்பதற்கு எம்மிடம் பணமும் இல்லை. எனவே, செல்வா தானாகவே வெட்டத்தொடங்கினார்.

ஆறாயிரம் ரூபாவுக்கு தென்னங்குற்றி வாங்கினோம். வெட்டிய பதுங்கு குழிக்கு தென்னங்குற்றியை பரப்பி மூடுவது மிகப்பெருவேலை. அதற்கு நிறைய மனித வலுத்தேவைப்பட்டது. அது கிடைக்கவில்லை.

இதனிடையே அரசின் வான்படை விமானங்கள் இரண்டு சீறியபடி வந்தன. கீழேயிருந்து அவற்றுக்கு எதிரான தாக்குதல் தொடுக்கப்பட்டது.

கீழே தாக்குதல் தொடுக்கப்பட்ட இடத்தை இலக்கு வைத்து எறிகணைகள் விழத்தொடங்கின. எங்களுக்கு அருகில் இருந்த கடைக்கு அருகே சுவர் மூலையில் நிற்கலாம் என நினைத்து வேகமாக அந்த இடத்துக்கு ஓடினேன். அங்கு என்னை

**அந்தப்பதுங்கு குழியினுள் ஒரு இருபது வயதுப் பெண் காயமுற்ற நிலையில் முனகியபடி படுத்திருந்தாள். மேலே விமானங்கள் உறுமியுறுமி வட்டமடித்துக்கொண்டிருந்தன. நான் அந்தப் பெண்ணின் காலடியில் ஒடுங்கியபடி அமர்ந்திருந்தேன். நீண்ட நேரம் வட்டமடித்த விமானங்கள் எப்படியோ குண்டுகளை வீசின. அவை எழுப்பிய ஒலி ஓய்ந்ததும், நான் அந்தப் பெண்ணை உற்றுப்பார்த்தேன்.**

உறைய வைத்த ஒரு காட்சியை நான் காண முடிந்தது.

நான் தேடி ஓடிய கடைச்சுவரோடு இணைந்து ஒரு பதுங்குகுழி காணப்பட்டது. அந்தப்பதுங்கு குழியினுள் ஒரு இருபது வயதுப் பெண் காயமுற்ற நிலையில் முனகியபடி படுத்திருந்தாள். மேலே விமானங்கள் உறுமியுறுமி வட்டமடித்துக்கொண்டிருந்தன.

நான் அந்தப் பெண்ணின் காலடியில் ஒடுங்கியபடி அமர்ந்திருந்தேன். நீண்ட நேரம் வட்டமடித்த விமானங்கள் எப்படியோ குண்டுகளை வீசின. அவை எழுப்பிய ஒலி ஓய்ந்ததும், நான் அந்தப் பெண்ணை உற்றுப்பார்த்தேன்.

அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அவளின் கால்கள் இரண்டும் காயப்பட்டிருந்தன. அவளின் காயம் மருந்தில்லாமல் மணக்கத் தொடங்கியிருந்தது. அவளாற் பேச முடியவில்லை.

விமான இரைச்சல்கள் ஓய்ந்தது. ஒருசில நிமிடங்களில் இன்னொரு பெண் அந்தப் பதுங்குகுழிக்கு வந்தாள். ஒருதுண்டு பாணும் ஒரு குவளை தேநீரும் அவளிடம் இருந்தது.

வந்த அந்தப்பெண் காயப்பட்டவளின் அக்கா. இரண்டு பெண்பிள்ளைகளும் அப்பாவும் கடையின் பின்னாலுள்ள சிறு தாழ்வாரத்தில் தங்கியிருந்தனர். அம்மா சில வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார்.

மிகவும் கஸ்டப்பட்டு தங்கையைத் தூக்கி நிறுத்தி இருத்தி, அணைத்துப் பிடித்தபடியே பாணைத் தேநீரில் தோய்த்து அந்தப்பெண் ஊட்டிவிட்டாள்.

எனக்கு இருவரையும் பார்க்க கண்ணீர் சுரந்தது. சிலநாட்கள் இரவு பகலாக அந்தக் காயப்பட்ட பெண்ணுடனேயே பதுங்கு குழிக்குள் நானும் இருந்தேன்.

இதனிடையே மூன்றுநாட்களில் புதுக்குடியிருப்பு பிரதேசம் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிந்தது.

நாங்களிருந்த தோப்புக்குள்ளேயே பத்துக்கு மேற்பட்ட தற்காலிக குடிசைகள் அமைந்துவிட்டன.

தொடரும்....

# மேற்குலகின் தாளத்திற்குப்....

துயில்கொள்வது மிகவும் ஆபத்தான விளைவுகளுக்கே வழிகோலிவிடும். சிங்கள அரசு மீதான மேற்குலகின் அழுத்தம் என்பது கடந்த ஓராண்டாக அதிகரித்து வருகின்ற பொழுதும், அது மேலும் அதிகரித்துச் செல்லும் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. மேற்குலகிடம் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் எப்பொழுது மண்டியிடுகின்றதோ, அப்பொழுதே தமிழீழ மக்கள் மீதான மேற்குலகின் கவலையும், கரிசனையும் முடிவுக்கு வந்துவிடக்கூடிய அபாயச்சூழலே தற்பொழுது நிலவுகின்றது.

தற்பொழுது சிங்கள அரசின் மீது சீற்றமும், அதிருப்தியும் கொண்டு மேற்குலகம் தண்டனைகளை விதிப்பது போன்ற தோற்றப்பாடு நிலவினாலும், இதுவிடயத்தில் நாம் கூர்ந்து அவதானிக்கும் பொழுது, அவை வெறும் அழுத்தங்களாக மட்டுமே விளங்குவதைப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி வரிச்சலுகையை நாம் கொள்ளலாம். சிங்கள அரசுக்கான ஏற்றுமதி வரிச்சலுகையை இடைநிறுத்துவதாக இவ்வாண்டு சனவரி மாதம் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்த பொழுதும், நடைமுறையில் இற்றைவரைக்கும் வரிச்சலுகை நிறுத்தப்படவில்லை. வரும் யூலை மாத நடுப்பகுதி வரை வரிச்சலுகை நடைமுறையில் இருப்பதோடு, தற்பொழுது சிங்கள அரசுடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் ஏற்றுமதி வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நீடிப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இதற்கான சமிக்ஞைகளை அண்மைய நாட்களில் ஐரோப்பிய – சிங்கள இராசதந்திரிகள் வெளியிட்டு வருவதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

மேற்குலகின் அணுகுமுறையையும், நிகழ்ச்சித் திட்டத்தையும் நன்கு புரிந்துகொண்டிருப்பதன் காரணமாகவே, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களை தனது வெளியுறவுத்துறை அமைச்சராகவும், முதன்மை இராசதந்திரியாகவும் அனைத்துலக அரங்கில் சிங்கள தேசம் களமிறக்கிவிட்டுள்ளது. `மனித உரிமைகள் தொடர்பாக எங்களுக்கும் கரிசனை உள்ளது. இருந்தாலும், மனித உரிமை மீறல் பிரச்சினைகளை மறந்துவிட்டு எமது நாட்டில் முதலீடுசெய்வதற்கு முன்வாருங்கள்` என்று அமெரிக்க அரசுக்கும், அதன் முதலீட்டாளர்களுக்கும் ஜி.எல்.பீரிஸ் விடுத்துள்ள அழைப்பு என்பது இதனையே உணர்த்தி நிற்கின்றது. ஒருபுறம் மேற்குலகின் தாளத்திற்கு ஆடுவது போன்று ஜீ.எல்.பீரிஸ் பாசாங்கு செய்து கொண்டிருக்க, மறுபுறும் தமிழீழ மக்களின் தேசிய அடையாளத்தையும், தாயகக் கோட்பாட்டையும் சிதைத்து, தன்னாட்சியுரிமைக் கோரிக்கையை சிதைப்பதற்கான நடவடிக்கைகளை தனது ஆயுதப் படைகள் ஊடாகவும், அரச இயந்திரம் மூலமாகவும் முழுமூச்சாக சிங்கள அரசு முன்னெடுத்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளை சட்டவிரோத அமைப்பாக அறிவித்தும், தமிழீழக் கோரிக்கை என்பது பாரத தேசத்தின் இறையாண்மைக்கும், நில ஒருமைப்பாட்டிற்கும் விரோதமாக அமைந்திருப்பதாக அபாய சங்கொலி எழுப்பியும் இந்திய ஏகாதிபத்தியம் விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தல் என்பது, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆணிவேருடன் பிடுங்கியெறிவதில் இந்திய ஏகாதிபத்தியம் கங்கணம் கட்டிநிற்பதையே உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறாக தமிழீழம், புகலிடம், தமிழகம் என மும்முனைகளில் விரியத் தொடங்கியுள்ள சவால்களை வெற்றிகொண்டு, தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதும், சிங்கள அரசையும், அதன் ஆயுதப் படைகளையும் அனைத்துலக அரங்கில் குற்றவாளிகளாக்குவதும், தமிழீழ தேசத்தின் வீரியம் கொண்ட வருங்கால அரசியல் செயற்பாடுகளிலேயே தங்கியிருக்கின்றது என்பதை மட்டும் உறுதியாகக் கட்டியம்கூற முடியும்.

# மேஜர் ஜெனரல்....

போர் மரபுகள் மற்றும் விதிமுறைகளை மீறிப்போர் புரிந்தமை, வன்னியில் கொல்லப்பட்ட பொதுமக்கள், பாரம்பரிய பூர்வீக நிலங்களில் இருந்து மக்களை இடம்பெயரச் செய்தல், மனிதத்திற்கு எதிராகப் போர் புரிதல், அநாதைகளாக அல்லற்படும் குழந்தைகள், விதவைகளாக வாழ்ந்த பெண்கள், உடல் உறுப்புக்களை இழந்தோர்கள், சித்தப்பிரமை அடைந்தோர்கள் சார்பில் நியாயம் கேட்க வேண்டிய பொறுப்பு எம்முடையதாகும். எனவே சர்வதேச நீதி மன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டியவர்தான் ஜேர்மனிக்கான துணைத் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் போன்றவர்கள் இன்னும் சிறிலங்காவில் இருந்து தூதுவர் நியமனம் பெற்று வெளிவரும் சாத்தியங்கள் இருக்கின்றன. அதற்கு முன்னர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயசை வெளியேற்றும் நடவடிக்கைக்கு நாம் முன்னுரிமை வழங்கவேண்டும்.

ஜேர்மன் வாழ் தமிழ் மக்களே, புலம்பெயர் வாழ் மக்களே உங்கள் நியாபூர்வமான எதிர்ப்பை ஜேர்மன் அரசுக்கும், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத் தொண்டர்கள், மனித உரிமை அமைப்புக்களையும் சந்தித்து உங்கள் ஆதங்கத்தை தெரிவித்து அனைத்துலக அபய ஸ்தாபனத்திற்கும் கண்டனக் அறிக்கைகளை அனுப்புவதோடு போர்க் குற்றங்கள் பற்றிய தகவலையும் வழங்குங்கள். உலகத் தலைநகரங்கள் தோறும் கண்டனப் பிரசுரங்கள், கவன ஈர்ப்புப் போராட்டங்களை வெளிப்படுத்தி தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸக்கு எதிராகக் குரல்கொடுப்போம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.